# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- TOPICWISE QUESTION
- WEEKLY CURRENT AFFAIRS
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- MONTHLY QUESTION AND ANSWER

**29.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மத்திய செய்திகள்

### 1. நால்கே புயல்

- **பிலிப்பைன்ஸ்** நாட்டின் தெற்கு பகுதிகளை 'நால்கே' என்கிற சக்தி வாய்ந்த புயல் பந்தாடியது.
- இதில் 31 பேர் பலியாகினர். பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள மாகாணங்களை நால்கே என்கிற சக்தி வாய்ந்த புயல் தாக்கியது.
- குறிப்பாக இந்த புயல் அங்குள்ள **மகுயிண்டனாவ் மாகாணத்தை** பந்தாடியது.

### 2. புதிய பெட்ரோல்-டீசல் கார்களுக்கு 2035 முதல் தடை: ஐரோப்பா முடிவு

- பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களில் இயங்கும் புதிய உள்ளெரி (இன்டர்னல் கம்பிஷன்) என்ஜின் கார்களின் விற்பனைக்கு வரும் 2035 ஆம் ஆண்டு முதல் தடை விதிக்க ஐரோப்பிய யூனியன் முடிவு செய்துள்ளது.
- இது தொடர்பாக, **'55 இலக்குக்கான திட்டம்'** என்ற தலைப்பில் ஒரு உடன்படிக்கையை உறுப்பு நாடுகள் மேற்கொண்டன.
- **புவி வெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாற்றத்துக்கு காரணமான பசுமை குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை** 2030 ஆம் ஆண்டுக்குள் 55 சதவீதம் குறைக்க ஐரோப்பிய யூனியன் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- அந்த இலக்கை அடைவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த **உள்ளெரி எஞ்சின் கார் தடை ஒப்பந்தம்** மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் காற்றில் கலக்கும் பசுமை குடில் வாயுக்களின் அளவை 2030க்குள் 55 சதவீதமும் ஐந்து ஆண்டுகள் கழித்து முழுமையாகவும் வாகன தயாரிப்பாளர்கள் குறைக்க உறுப்பு நாடுகள் உத்தரவிட வேண்டும்.

### 3. ராஜஸ்தானில் உலகின் மிக உயரமான சிவன் சிலை

- **ராஜஸ்தானின் ராஜ்சமந்த்** மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள **369 அடி** உயர சிவபெருமான் சிலை பக்தர்களின் தரிசனத்திற்காக திறக்கப்பட உள்ளது.
- **தத் பாதம் சன்ஸ்தான்** என்ற அறக்கட்டளையால் நிறுவப்பட்டிருக்கும் இச்சிலை உலகிலேயே மிக உயரமான சிவன் சிலை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- முதல்வர் அசோக் கெலாட், பேரவை தலைவர் **சி.பி.ஜோஷி** உள்ளிட்டோர் முன்னிலையில் இந்த பிரம்மாண்ட சிவன் சிலை பக்தர்களின் தரிசனத்திற்காக திறக்கப்பட உள்ளது.
- ராஜ்சமந்த் மாவட்டத்தின் **நாத்வாரா** நகரில் மலைமீது சிவபெருமான் தியான வடிவில் சிலை நிறுவப்பட்டுள்ளது.
- உலகிலேயே மிக உயரமான இந்த சிவன் சிலையில் மின்தூக்கிகள், படிக்கட்டுகள், பக்தர்களுக்கான அரங்கம் ஆகியவை உள்ளன.
- கட்டுமானத்துக்காக 3,000 டன்கள் இரும்பு மற்றும் உருக்கு, **2.5 லட்சம் கியூபிக் டன் கான்கிரீட்** ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. சுமார் பத்து ஆண்டுகள் கட்டுமான பணி நடைபெற்றுள்ளது.

- **250 ஆண்டுகளுக்கு** தாங்கி நிற்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் மணிக்கு **250 கிலோ மீட்டர்** வேகத்தில் ஆன காற்றையும் இச்சிலை தாங்கும்.

### 4. நெல் ஈரப்பத அளவை 19 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு அனுமதி

- டெல்டா மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லில் ஈரப்பத அளவை **17 சதவீதத்திலிருந்து 19 சதவீதமாக** உயர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- சாதாரண நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூபாய் **2040 ஆகவும் சன்னரக நெல்லுக்கு** குவிண்டாலுக்கு **ரூபாய் 2060** ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 5. ஐஎன்எஸ் விக்ராந்த்

- நாட்டின் முதல் விமானம் தாங்கி போர்க்கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் முற்றிலும் உள்நாட்டில் கட்டப்பட்டது.
- இந்திய எஃகு உற்பத்தி துறையின் ஆற்றலுக்கு சாட்சியாக விளங்கி வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- **குஜராத்தின் சூரத் மாவட்டத்தில் ஆர்சலர்மிட்டல் திப்பான் எஃகு நிறுவனத்தின்** விரிவாக்க பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மோடி காணொலி வாயிலாக பங்கேற்றார்.

### 6. டிவிட்டர் உரிமையாளர் எலான் மஸ்க்

- சர்வதேச அளவில் புகழ்பெற்ற சமூக வலைத்தள நிறுவனமான ட்விட்டரை சுமார் **₹3,52,000 கோடிக்கு** வாங்கும் ஒப்பந்தத்தை டெஸ்லா நிறுவன உரிமையாளர் எலான் மஸ்க் இறுதி செய்துள்ளார்.
- டிவிட்டர் உரிமையாளரான முதல் நாளிலேயே நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியான ( சிஇஓ) **பராக் அகர்வால்** நிறுவனத்தின் சட்ட அதிகாரியும் இந்தியருமான **விஜயா கட்டே** உள்ளிட்ட நான்கு மூத்த அதிகாரிகளை பணியிலிருந்து எலான் மஸ்க் நீக்கியுள்ளார்

### 7. ஒரே நாடு-ஒரே காவல் சீருடை

- நாடு முழுவதும் காவலர்கள் அனைவருக்கும் ஒரே சீருடை அறிமுகப்படுத்தும் வகையில் 'ஒரே நாடு-ஒரே காவல் சீருடை' என்ற யோசனையை பிரதமர் நரேந்திர மோடி முன்வைத்தார்.
- மாநில உள்துறை அமைச்சர்கள் பங்கேற்கும் சிந்தனை அமர்வு கூட்டம் **ஹரியானாவின் சூரஜ்குண்ட்** நகரில் தொடங்கியது.
- குற்றச்செயல்களை தடுப்பதிலும் குற்றவாளிகளை கண்டறிவதிலும் மாநிலங்களுடைய ஒத்துழைப்பு நிலவ வேண்டியது அவசியம்.
- ஒத்துழைப்பு மிக்க கூட்டாட்சி என்பது அரசமைப்புச் சட்டத்தின் கொள்கை மட்டுமல்ல. அது **மத்திய, மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகும்.**